## மரணத்திற்குப் பின் சம்பவிப்பது என்ன?

இயேசு கிறிஸ்து தம்முடைய மக்களை மரண பயத்தினின்று விடுதலையாக்குகிறார். அது அவர்களுக்கு, "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருப்பதாகவும் இருக்கும். (2 கொரிந்தியர் 5:8). பவுல் "அது அதிக நன்மையாயிருக்கும்" (பிலிப்பியர் 1:23) என்றார். "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; " (சங்கீதம் 23:4) என்று தாவீது கூறினார். இயேசு கிறிஸ்துவை நிராகரிப்பவர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிகேயர் 1:7,8,10) என்று கூறுகிறது.

## உண்மையாகவே பரலோகம் என்று ஒன்று இருக்கிறதா?

தாம் ஆயத்தம் பண்ணப் போயிருக்கிற இந்த இடத்தைக் குறித்து இயேசு தம்முடையவர்களுக்கு மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3). நான் கிறிஸ்தவனாக இருப்பதற்கு ஒரு காரணம் என்னவெனில், என் இரட்சகரை முகமுகமாய்ப் பார்த்து, அவருடைய அன்பிற்காக அவருக்கு நன்றி கூறும் அந்நாளை நான் எதிர் நோக்கி இருக்கிறேன். என் நித்திய வீடாகிய பரலோகத்தின் மேன்மையை அனுபவிக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

விநியோகிப்பவர் முகவரி

7 IMPORTANT QUESTIONS (Tamil)

*எங்கள் முகவரி:*
**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**
67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.
Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in



# ஏழு முக்கியமான கேள்விகள் 7

மனிதர் எப்பொழுதும் கேட்கும் சில முக்கியமான கேள்விகளாவன: "நம்மைப் படைத்தவர் எப்படிப்பட்டவர்? என் பாவங்களைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும்? நான் எப்படி சோதனையை மேற்கொள்ளுவது? நான் தேவனை எப்படி அறிவது? வாழ்க்கையின் நோக்கம் என்ன? இயேசு கிறிஸ்துவை நிராகரிப்பவர்களுக்கு மரணத்திற்குப் பின் சம்பவிப்பது என்ன? உண்மையாகவே பரலோகம் என்று ஒன்று இருக்கிறதா?" இந்த எல்லாக் கேள்விகளுக்கும் தகுந்த முழுமையான பதில் தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்திலும், ஜீவிக்கின்ற வார்த்தையாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

## நம்மைப் படைத்தவர் எப்படிப்பட்டவர்?

இயேசு இந்தக் கேள்விக்கு பதிலளித்திருக்கிறார். "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்." (யோவான் 14:9) என்றார். "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்; (யோவான் 10:30). ஒருவர் இயேசுவின் முகத்தைப் பார்த்தால், "நான் தேவனைக் கண்டேன்" என்று சொல்ல முடியும். இயேசு மனித உருவில் வந்த தேவன். தேவனை இவ்வுலகுக்கு மனிதனிடத்திற்கு கொண்டு வந்தவரும், மனிதனை தேவனிடத்திற்கு உயர்த்தியவரும் இயேசுவானவர்தான்.
தேவன் எப்படிப்பட்டவர் என்று அறிய விரும்புகிறீர்களா? அப்படியானால் இயேசுவின் வாழ்க்கையைப்பற்றி சுவிசேஷங்களிலிருந்து வாசியுங்கள். தேவனுடைய அன்பைப்பற்றி ஏதாவது அறிய விரும்புகிறீர்களா? "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16) என்று இயேசு கூறியுள்ளார்.

## என் பாவங்களைக்குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?

அநேகர் பாவத்தினால் ஏற்படும் குற்ற உணர்வின் பாரத்தை சுமந்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், என்று ஒருவர் வானொலியில் கூறுவதைக் கேட்டேன்.

உங்களுடைய இருதயமும் இது போல் குமுறினால், உங்களுக்கு இதோ ஒரு நற்செய்தி: "ஆதலால் சகோதரரே, இவர் (இயேசு கிறிஸ்து) மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்" என்றும் (அப்போஸ்தலர் 13:38) "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினாரென்றும் அறிவோம்" (கொலோசெயர் 1:20). ஒரு காலத்தில் நானும் லூக்கா 15ஆம் அதிகாரத்தில் கூறியுள்ள இளைய குமாரனைப் போல் இருந்தேன். நான் தேவனை விட்டு வெகுதூரம் சென்று விட்டேன். ஆனாலும் நான் தேவனுடைய இரக்கத்தை நாடி அவரிடம் திரும்பிய போது அவர் என் பாவங்களை இலவசமாய் மன்னித்தார். நீங்கள் கிறிஸ்துவின் சிலுவையண்டையில் வரும்பொழுது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். இன்றே கிறிஸ்துவினிடம் வாருங்கள்.

அப்பொழுது அவருடைய அன்பு, இரக்கம் இவற்றின் இனிமையை அறிந்து கொள்வீர்கள்.

## நான் சோதனையை மேற்கொள்ளுவது எப்படி?

சோதனையை மேற்கொள்வதற்கு பெலன் வேண்டும். உங்கள் இருதயத்திற்கு பெலனளிக்கவும், ஆறுதலளிக்கவும் உங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை. இயேசு கிறிஸ்து புது வாழ்வு வாழ்வதற்கான பெலன் தருவார். "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய "இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:25).

## நான் தேவனை அறிவது எப்படி?

நம்மை விட உயர்ந்தவர்களோடு தொடர்பு கொள்வதற்கு நமது இருதயம் ஏங்குகிறது. தேவனால் மட்டுமே அந்த ஏக்கத்தை பூர்த்தி செய்ய முடியும். இயேசு கிறிஸ்து, நம்மை, தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டு வருகிறார். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12).

## வாழ்க்கையின் நோக்கம் என்ன?

இயேசுவினிடமாய் மனம்திரும்பிய பவுலும், தம்முடைய நாமத்திற்கு சாட்சியாய் நின்று, மற்றவர்கள், "இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்" (அப்போஸ்தலர் 26:18) என்று கூறினார். அதே மகிழ்ச்சியான ஊழியத்தை செய்வதின்மூலம் நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் சந்தோஷத்தை அடையலாம்.